## முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்

## O.S.No.2/2023

PW1–ராஜேந்திரன் நாள்.26.11.2025

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 6 முதல் 9 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

நான் தற்போது ராஜாதியேட்டர் அருகில் குடியிருந்து வருகிறேன். அது என் மகனின் வீடாகும். அந்த வீடு என்மனைவி பெயரில் என்மகன் வாங்கிய வீடாகும். 1வது அயிட்ட சொத்தில் நான் தற்போது குடியிருக்கவில்லையா என்றால் அதை தற்போது இடித்து வைத்துள்ளார்கள். வா.சா.ஆ.2 பட்டா 1வது அயிட்ட சொத்தின் ஒருபகுதிக்கானது என்றால் சரியல்ல. அது முழுமைக்கானது. வா.சா.ஆ.2 பட்டா என்பெயரில் தனித்துள்ளது என்றால் சரிதான். தாவா 1வது அயிட்ட சொத்தில் எனக்கு பாகத்தில் ஒதுக்கப்பட்ட பகுதிக்கு தான் வா.சா.ஆ.2 தனிப்பட்டா நான் வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 பட்டாவை அரசாங்கம் தான் எனக்கு கொடுத்தது. நான் வாங்கவில்லை. நான் கூறும் பூர்விக சொத்துகளுக்கு என்பெயருக்கு அரசாங்கம் பட்டா கொடுக்கவில்லை என்றால் கூட்டுப்பட்டா கொடுத்துள்ளது. மற்ற சொத்துகளுக்கு என்பெயருக்கு தனிப்பட்டா கொடுக்கப்பட்டுள்ளதா என்றால் எனக்கு தெளிவாக தெரியவில்லை. தாவா 1வதுஅயிட்ட சொத்தில் சுப்புலட்சுமி, பெரியம்மாள் மற்றும் பவுனம்மாள், சரவணன் ஆகியோர்கள் அவர்களுக்குரிய பாகத்தை 1ம் பிரதிவாதிக்கு ஆதரவாக நான்கெல்லை குறிப்பிட்டு 09.11.2015ம் தேதி கிரய பத்திரம் எழுதிகொடுத்துள்ளார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. என்னுடைய வாக்குமூலத்தில் 09.11.2015 தேதியில் எழுதிய கிரயபத்திரம் பற்றி சொல்லியுள்ளேன் என்றால் எழுதிய தேதியில் எனக்கு தெரியாது. அந்த பத்திரத்தில் என்னுடைய பாகத்தை நான்கெல்லையாக குறிப்பிட்டுள்ளார்கள் என்றால் அவர்களாக அதை எழுதிகொண்டார்கள். குடும்பசொத்துக்களை பொறுத்து ஏற்கனவே பாகம் ஆனதால் தான் அவ்வாறு அவர்களுடைய பாகத்தை பொறுத்து நான்கெல்லைகள் குறிப்பிட்டு எழுதிகொடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல.

அவ்வாறு அவர்கள் எழுதிகொடுத்தது போக மீதியுள்ள என்பாகத்தை பொறுத்துதான் நான் தனிப்பட்டா வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி ஆவணங்கள் ஏற்கனவே ஏற்பட்ட வாய்மொழி பாகத்தினை அனுசரித்து அதன்அடிப்படையில் ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ஏற்கனவே பாகம் வாங்கிவிட்டதால் பாகப்பிரிவினை கோரி நான் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றால்சரியல்ல. என்பெயருக்கு அரசாங்கம் பட்டா கொடுத்த பகுதியில் நான் வீடு கட்டுவதற்கு போர் போட்டுள்ளேன் என்றால்சரியல்ல. பாகம்பிரிந்து என்னுடைய தனித்த அனுபவத்தில் சொத்து வந்துவிட்டதால் தான் வீடு கட்ட நான் போர் போட்டேன் என்றால் சரியல்ல. ராமச்சந்திரன் அவர் கிரயம் வாங்கிய சொத்தின் வீடு கட்டியுள்ளார் என்றால் ஏற்கனவே இருந்த வீட்டை இடித்து கட்டியுள்ளார். அவர் வங்கியில் லோன் பெற்றும் தனியார் கடன் பெற்றும் கட்டியுள்ளார் என்றால் சரியல்ல. பூர்விக பணத்தை வைத்து கட்டியுள்ளார். தாவா சொத்துக்களில் எந்த இன சொத்துக்களை அம்மன் ரியல் எஸ்டேட்டுக்கு வித்தோம் என்றால் மொத்தம் 9.5ஏக்கரை விற்றோம். அதனுடைய சர்வேஎண் எனக்கு சரியாக தெரியவில்லை. ஞாபகமில்லை. மேற்படி சொத்துக்களை இந்த வழக்கில் இருந்து நான் நீக்கவில்லை என்றால் சரியல்ல. எனக்கு சம்மந்தமில்லாத சொத்து சம்மந்தமாக வழக்கு போட்டுள்ளேன் என்றால்சரியல்ல. அம்மன் ரியல்எஸ்டேட் மனோகரனை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை. சம்மந்தமில்லாத சொத்துக்களை இந்த வழக்கில் சேர்த்திருப்பதாலும், அவசிய தரப்பினரை வழக்கில் சேர்க்காததாலும் வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

**பிரதிவாதிகள் தரப்பு கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.